தொகுதி ௨
சித்திரம் ௧௨

பொன்னிவளநாட்டின்
வீர சரித்திரம்

# பெரும் தியாகம்



www.ponnivala.com

© 2012 Ponnivala Publishing



தொகுதி-2 சித்திரம்-12

## இறுதிப் போர்

பொன்னாச்சியின் சாபத்திலிருந்து விடுபட்ட பொன்னிவளநாட்டின் இளைய சகோதரன் தன் அண்ணன் மற்றும் சாம்புகனுடன் சேர்ந்து கொடியபன்றியான கொம்பனை ஈட்டியை வீசிக் கொன்றான். தங்களுடைய பன்றியை கொன்றதால் கோபம் கொண்ட வேட்டுவர்கள் பொன்னிவளநாட்டு சகோதரர்களுடன் போரிட வந்தனர். வேட்டுவர்களுக்கும் பொன்னிவளநாட்டு சகோதரர்களுக்கும் இடையில் கடும்யுத்தம் ஏற்பட்டது.


<u>மறுவர்ணனை</u>
பிரெண்டா பெக். இ
கசாண்ரா கொர்நால்

<u>தமிழாக்கம்</u>
சிவசங்கர் நவரட்ணம்
சத்தியபாமா


<u>சித்திரங்கள்</u>
ரவிசந்திரன & குழு


<u>வடிவமைப்பு</u>
பிரியா கோவிந்தராஜன்
ஸ்டெப்பான் ஹானிஹன்


<u>ஒப்பச்சர்</u>
முலர்விழி ராஜ்

<u>வெளியீட்டாளர்</u>
பொன்னிவளா
பப்ளிகேசன்


© 2012
சாப்ட்சைன்ஸ்
அசோசியேசன் லிமிடட்.


நான் என் வாளை எடுத்து கொம்பனுடன் போரிட வேண்டும். ஆனால்! எனக்கு உடல்நிலை சரியில்லை. எமது வீரர்களையும், நாய்களையும் கொம்பன் கொடூரமாக கொன்றுவிட்டான்.
என்னுடைய இந்த நிலைக்கு, பொன்னாச்சியின் சாபம் தான் காரணம் என்று இப்பொழுது தான் தெரிகிறது.
இனி சிறிதும் தாமதிக்காமல் சென்று பொன்னாச்சியைப் பார்த்து, அந்தக் கொடியபன்றியை அழிக்க உதவி கேட்க வேண்டும்.


சாம்புகா! அரண்மனைக்குச் சென்று பொன்னாச்சியை அழைத்துவா.
அரண்மனைக்கு விரைந்து சென்ற சாம்புகன் தங்காளிடம்...
அம்மா! அரசர்கள் இருவரும் பொன்னாச்சியை அழைத்து வரும்படி என்னை அனுப்பியுள்ளனர். அவளை போருக்கு அழைத்துப் போகாத கோபத்தில் சங்கரைச் சபித்துவிட்டாள்.
அதனால் அவர் உடல்பலத்தினை இழந்து கடும்காய்ச்சலுடன் வாளைத் தூக்க முடியாமல் இருக்கிறார்.
இதனால் நான் கொம்பனைக் கொல்ல நம் வீரர்களுடன் சென்றேன். ஆனால் அனைவரையும் அது கொன்று விட்டது. கொம்பனை பொன்னாச்சியின் உதவியின்றி அழிக்க முடியாது!
என்ன காரியம் செய்தீர்கள்! நம் பொன்னாச்சி வரத்தால் பிறந்தவள் என்று தொரியாதா?
அவள் சாபத்தால் என்ன நடந்திருக்கிறது என்று பார்த்தாயா?
அரண்மனையில் அவளைச் சில நாட்களாக காணவில்லை. இரு!
நான் சென்று தேடிப் பார்க்கிறேன்.


பொன்னாச்சி!
தங்காள் எங்கு தேடியும் பொன்னாச்சியை காணக் கிடைக்கவில்லை.
பொன்னாச்சி!
நீ எங்கிருக்கிறாய்!
இங்கிருக்கிறாயா?
பொன்னாச்சி!


உர்ர்ர்ர்...
அனைத்து இடத்திலும் தேடி வந்த தங்காள் அருகிலிருந்த கல்லின் கீழே பார்த்தாள். அங்கே பொன்னாச்சி உறங்கிக் கொண்டிருந்தது.
பொன்னாச்சி! என் அண்ணனை சபித்தாயா? உன் சாபத்தால் நம் வீரர்கள் அனைவரும் இறந்து விட்டனர்.
என் அண்ணன் வாளைத் தூக்கி போரிட முடியாமல் பலமிழந்து படுத்திருக்கிறார்!
நானும் உங்களைப் போல் வரத்தால் பிறந்தவள் தானே!
உங்கள் அண்ணன்கள் போருக்கு புறப்பட்டுச் செல்லும் போது என்னை அழைக்கவில்லை.
அதனால் தான் நான் சாபமிட்டேன். தயவு செய்து என்னை போருக்கு அனுப்பி வையுங்கள்.
கவலைப்படாதே பொன்னாச்சி!


முதலில் செல்லாத்தா கோவிலுக்குச் சென்று நீ இட்ட சாபத்தை திரும்பப் பெற்றுக் கொள்.
பின் உன் விருப்பப்படி சாம்புகனுடன் வீரமலைகுச் செல்!
சரி! இப்பொழுதே நான் புறப்படுகிறேன்.
உன் உதவியில்லாமல் கொம்பனை அழிக்க முடியாது.


தாயே செல்லாத்தா! தயவு செய்து நான் சங்கருக்கு இட்ட சாபத்தை நீக்கி அருள் புரியுங்கள்.
அவர் மீண்டும் பழைய பலத்துடன் போருக்குத் தயாராகட்டும்.
வ்ஷ்ஷ்ஷ்
என்ன இது? திடீரென்று காய்ச்சல் நின்று உடம்பும் முன் போல் பலம் பெற்றுவிட்டதே!


சாம்புகா!
பொன்னாச்சியை தக்க மரியாதையுடன் போருக்கு அழைத்துச் செல்!
சரி தாயே!


சாம்புகன் பொன்னாச்சியை வீரமலைக்கு அழைத்துச் சென்றான். அங்கே சங்கர் பொன்னாச்சியின் மேல் மிகுந்த கோபத்தில் இருந்தார்.
பொன்னாச்சி! நான் அழிய வேண்டும் என்பதற்காகவா என்னை சபித்தாய்?
என்னை மன்னித்து விடுங்கள்!
என்னை நீங்கள் போருக்கு அழைத்துச் செல்லாத கோபத்தல், நான் உங்களைச் சபித்தேன்.
சரி விடு பொன்னாச்சி!
வா! இப்பொழுதே கொம்பனை அழிக்க புறப்படுவோம்.

சகோதரர்கள் பொன்னாச்சியுடம் கொம்பன் இருக்கும் இடத்திற்குச் சென்றனர்.





இப்போழுது பார் என் பலத்தை.
முதலில் உன் வலதுகாதை பிடுங்குகிறேன்.
கசக்!
பொன்னாச்சி மின்னல் வேகத்தில் கொம்பனின் வலதுகாதைப் பிடுங்கி வந்து தின்றது.
உன்னால் என் ஒரு காதைத்தான் பிடுங்க முடியும். மற்றொரு காதை எதுவும் செய்ய முடியாது.
கொம்பா! பொறுமையாக இரு. சீக்கிரமே நீ அதையும் இழந்து விடுவாய்.
ஈஈஈஈஈ!
பொன்னாச்சி மீண்டும் கண்மூடித்திறக்கும் நேரத்தில் பாய்ந்து கொம்பனின் இடதுகாதையும் கடித்தெடுத்தது.
கசக்!
கசக்!
ஏய் கொம்பா! உனக்கு இருகாதுகளும் இருக்கிறதா என்று பார்.


காதுகளை இழந்த கொம்பன் பயத்தில் ஓடத் தொடங்கினான்.
ஆனாலும் பொன்னாச்சி அவனை விடாமல் துரத்திச் சென்றது.
ஹுர்ர்ர்
துரத்திச் சென்ற பொன்னாச்சி கொம்பனின் வாலைப்பிடித்து ஏறி தன் விஷம் நிறைந்த பற்களினால் உயிர்நிலையைக் கடித்தது. இதனால் உடல் முழுவதும் விஷம் பரவி பலம்  இழந்த கொம்பன் வலியில் ஓலமிட்ட படி ஓடினான்.


அப்போது குன்றின் உச்சியில் நின்ற சங்கர் விஷ்ணுவை மனதில் நினைத்து ஈட்டியை குறி பார்த்து கொம்பன் மேல் எறிந்தார்.
வ்விஷ்ஷ்ஷ்
ஹர்ர்ர்
குறி தவறாத ஈட்டி கொம்பனின் உடலில் ஒருபுறம் புகுந்து மறுபுறமாக வெளியேறியது. அப்போது அவன் வேட்டுவ அரசியான வீரதங்காளை நினைத்து அபயக்குரல் எழுப்பிய படி தரையிலே சாய்ந்து உயிரைவிட்டான்.
வீரதங்காள்! என்னைக் காப்பாற்று!
ஆ...வீரதங்காள்!


அதேநேரம் வீரப்பூரில்...
ஓ...வீரதங்காள்!
கொம்பனின் அபயக்குரல் கேட்கிறது! சீக்கிரம் நம் வீரர்களை தயார்படுத்துங்கள்.
கொம்பனின் மரணஓலம் நிச்சயம் வீரப்பூருக்கு கேட்டிருக்கும்.
என்நேரமும் வேட்டுவப்படை நம்மைத் தேடி இங்கே வரலாம்.
சாம்புகா! கொம்பனின் உடலைத் துண்டங்களாக்கி எனக்கும், சங்கருக்கும், உனக்கும், தங்காளுக்கும், விஷ்ணுவிற்கும், பொன்னாச்சிக்கும் மற்றும் பக்கத்து ஊர் மக்களுக்கும் ஆளுக்கு ஒரு பங்குகளாக பிரித்து வை.


ம்...
வேட்டுவர்கள் சண்டையிடத் தயாராகிறார்கள்.
விஷ்ணு வேட்டுவர்கள் சண்டைக்கு தயாராவதைப் பார்த்துக் கொண்டிருந்தார்.
பூமியில் சகோதரர்கள் இருவரின் பதினாறு ஆண்டுகள் வாழ்க்கைக்காலம் முடிவடைந்துவிட்டது.
நான் அவர்களின் உயிர்களை திரும்பப் பெற்று அதை சிவனிடம் ஒப்படைக்க வேண்டும்.
விஷ்ணு அவர்களின் உயிர்களை எடுத்து வர பூமிக்கு புறப்பட்டார்.
சிவனுக்கு நான் அளித்த சத்தியத்தை இப்பொழுது வேட்டுவர்களுடன் இணைந்து நிறைவேற்ற வேண்டும்.



வீரப்பூரின் சகோதரர்களே!
நம் கொம்பனை அந்த பொன்னிவளநாட்டு காராளர்கள் கொன்று விட்டனர்.
அந்த நாசகார பகையாளிகளின் இனத்தை வேரோடு அழிக்க வேண்டும்.
சகோதரர்களே! தயாராகுங்கள்!
அப்போது அவர்கள் முன் விஷ்ணு தோன்றினார்.
அப்பா! வேடுவர்களே! உங்களுக்கு உதவி செய்ய நான் இருக்கிறேன். எதற்கும் பயப்பட வேண்டாம்.
என்னைப் பின் தொடர்ந்து வாருங்கள்.


விஷ்ணு சலவைக்காரனைப் போல், உருமாறி பன்றிக்கறிக்கு காவலிருந்த பொன்னரிடம் சென்றார்.
அப்பா! யார் நீ? எந்த ஊர்?
சாமி! நான் வீரப்பூரின் சலவைக்காரனுங்க! இப்பத்தான் கேள்விப்பட்டேனுங்க. இந்தக் காட்டுல ஒரு பெரியபன்னியக் கொன்னுட்டாங்களாம். என் பொஞ்சாதி கர்ப்பமா இருக்கா சாமி! அவ பன்னிக்கறிய ருசி பார்க்கணும்னு ஆவலா எங்கிட்டே கெஞ்சினாங்க.
இங்க பன்னிக்கறிய நீங்க கூறு போட்டு வெச்சிருக்கீங்களே! சாமி! தயவு செஞ்சு அதுல கொஞ்சம் எனக்கும் கொடுத்தீங்கன்னா...
அடடா! நீ கொஞ்சம் முன்னமே வந்திருக்கக் கூடாதா? இப்பொழுது அனைத்தையும் சரியாக் கணக்குப் பண்ணி ஏழுபங்குகளாக பிரித்துவிட்டோம், மிச்சம் எதுவுமில்லையே!
அதோ! அது பன்றியின் தலை தானே! தயவு செய்து அதையாவது எடுத்துக் கொள்ள அனுமதி தாருங்கள் சாமி.


தாராளமாக எடுத்துச் செல்லுங்கள்!
யாருடன் பேசிக் கொண்டு இருந்தீர்கள்?
ஒரு சலவைத் தொழிலாளி தன் மனைவிக்கு பன்றிக்கறி வேண்டும் என்று கேட்டான். அதனால், நான் பன்றியின் தலையை அவனுக்குக் கொடுத்து விட்டேன்.
விஷ்ணு சலவைக்காரன் போல் உருமாறி பன்றியின் தலையை எடுத்துச் சென்றார்.
சங்கரும், சாம்புகனும் அங்கே வந்து பொன்னர் செய்ததைக் கேட்டு மனம் வருந்தினார்கள்.
என்ன? கொம்பனுடைய தலையையா எடுத்துக் கொடுத்தீர்கள்? ஐயோ! ஏதோ கெட்டது நடக்கப் போவது போல் தெரிகிறதே! பன்றியின் தலையை இழந்தது போல் சீக்கிரம் நம் தலையையும் இழக்க வேண்டி வரப்போகிறது பாருங்க!






காராளசகோதரர்களுக்கும், வேட்டுவர்களுக்கும் இடையே கடும்சண்டை மூண்டது.





சங்கரும், சாம்புகனும் வேட்டுவர்களை வெட்டிச் சாய்த்துக் கொண்டே இருந்தும் போர் முடிவுக்கு வரவேயில்லை. காரணம் விஷ்ணு அவர்களை கொல்லவதற்காக மேலும் மேலும் வேட்டுவவீரர்களை தன் சக்தியால் உருவாக்கி அனுப்பிக் கொண்டே இருந்தார்.


இறுதியில் சங்கர் சோர்வடைந்தார்.
சாம்புகா! என்ன நடக்கிறது இங்கே? நாம் எவ்வளவு தான் பாய்ந்து பாய்ந்து வெட்டிச் சாய்த்தாலும், மேலும் மேலும் வேட்டுவர்கள் வந்து கொண்டே இருக்கிறார்களே!
இதற்கு காரணம், விஷ்ணு என்று சங்கருக்கு புரிந்ததும், கோபத்தில் விஷ்ணுவை நோக்கி தன் வாளை ஓங்கினார். ஆனால், விஷ்ணுவின் சக்தியால் கீழே தூக்கி வீசப்பட்டார்.
ஹ...!
ம்ம்ம்...
காராளர்களே! இன்னும் ஒருதடவை போரிடுங்கள். இது தான் நீங்கள் இறுதியாக எதிர்கொள்ளும் படை! இது சத்தியம்.



அண்ணா! உங்களின் உதவி எனக்குத் தேவை.
சங்கருக்கு பொன்னரின் உதவியில்லாமல் இந்தப் போரை வெல்ல முடியாது என்று தெரிந்து அவரின் உதவியை வேண்டினார்.
ஊ...!
ஹக்!
ஹா!
எவரேனும் எஞ்சியுள்ளனரா?
வேட்டுவவீரர்கள் அனைவரையும் நாம் அழித்துவிட்டோம்.
வா! ஆற்றுக்குச் சென்று நம் வாட்களைச் சுத்தப்படுத்திவிட்டு வரலாம்!


சல...சல...
சல...சல...
பொன்னரும், சங்கரும் ஆற்றங்கரையை நோக்கிச் செல்லும் வழியில் நின்ற மரத்தின் இலைகள் திடீரென சல சலக்கும் ஒலி கேட்டு சங்கர் அங்கே பார்த்தார். ஆனால், அம்மரத்தின் கிளையில் விஷ்ணு அமர்ந்திருந்தது அவர் கண்களுக்கு தெரியவில்லை.
ஆ..! காற்று வீசவில்லை. ஆனால் இலைகள் அசைகின்றனவே!
கவலைப்படாதே தம்பி! எல்லாம் நல்லபடியாக முடிந்துவிட்டது. இரத்தக்கறை காய்வதற்குள் நாம் வாட்களைக் கழுவலாம் வா!


மரத்தின் கிளையில் இருந்த விஷ்ணு கைகளில் மலர்களால் அலங்கரித்த அம்பை வில்லில் தொடுத்து உரிய தருணத்திற்காக தயாராக இருந்தார்.
சகோதரர்கள் இருவரும் ஆற்றில் இறங்கியதும், அவர் அம்பை குறி பார்த்து சங்கரை நோக்கி எய்தார்.


சரக்!
ஆ..! அம்பு ஒன்று பறந்து வந்து என் பூநூலை அறுத்துவிட்டதே!
ஆ..! கடவுளே!
என்ன?
பாய்ந்து வந்த அம்பு சங்கரின் மார்பில் கிடந்த பூநூலை அறுத்துச் சென்றது. அப்போதே அவருக்கு இந்த துர்சம்பவத்தின் அர்த்தம் புரிந்துவிட்டது.
இந்த துரதிஷ்ட சம்பவத்தின் காரணம் யாரென்று எனக்குத் தெரியும்.



என் பூநூலை அறுத்துச் சென்றது விஷ்ணு எய்த அம்பு தான்.
என்ன? விஷ்ணுவா?
ஆம்! இனிமேல் நான் ஒரு நிமிடம் கூட உயிர் வாழக்கூடாது.
நமக்கு இப்போழுது பதினாறு வயது!
இத்தோடு பூமியில் நமது ஆயுட்காலமும் முடிந்து விட்டது.
நம் பெற்றோர்கள் இருக்கும் சொர்க்கத்திற்கே நாமும் செல்ல வேணடும்.



நம் செல்லத்தங்கை தங்காள் ஒரு தெய்வீகப்பிறவி! அவளைப்பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை.
நான் போகிறேன் அண்ணா!
பனிரெண்டு யானைகளின் பலத்தினைக் கொண்ட பராக்கிரமசாலியான சங்கர் தன் வாளைத் தரையிலே ஊன்றும் போது உடல் நடுங்கியது. பின் வெகு வேகமாக சில அடி தூரம் பின் நோக்கி ஓடிய அவர் அதைவிட வேகமாக..
ச்சக்!
முன்னோக்கி ஓடி தன் வாளின் மேல் பாய்ந்து...
ளளளளளள


தன்னுயிரை மாய்த்துக் கொண்டார்.
ஓ...!
என் சகோதரன் தன்னைத் தானே அழித்துக் கொண்டானே!
அவனில்லாமல் நான் மட்டும் வாழ்வதென்பது முடியாத காரியம்.
ச்சக்!
சங்கர் இறந்த துயரத்தில் பொன்னரும் தன்னுயிரை மாய்த்துக் கொண்டார்!
கீஈஈஈஈஈ!
விஷ்ணு கழுகாக மாறி நடப்பதை பார்த்துக் கொண்டிருந்தார்.


வாட்களைக் கழுவச் சென்றவர்கள், வெகுநேரமாகியும் திரும்பாததால் சாம்புகன் அவர்களைத் தேடி வந்தான்.
ஐயோ! தெய்வமே! இருவரும் தங்களின் உயிரை மாய்த்துக் கொண்டுவிட்டனரே.
இனி அவர்களின்றி என்னால் இந்த பூமியில் வாழ முடியாது.
கிராக்!
சதக்!
மூவரும் தங்களின் உயிர்களை தாங்களே அழித்துக் கொண்டனர்!


அங்கே வந்த விஷ்ணு அம்மூவரின் உயிரையும்,
தங்கச்சிமிழிலில் இட்டு சிவனிடம் எடுத்துச் சென்றார்.


திருக்கைலாயம் வந்த விஷ்ணு..
நான் கூறியபடி பொன்னிவளநாட்டு இருகாராளர்களின் உயிரையும், அவர்களின் சேவகன் உயிரையும், கொண்டு வந்திருக்கிறேன்.
நான் உங்களுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றிவிட்டேன். இதைப் பெற்றுக் கொண்டு தயவு செய்து...
என் வலம்புரிச் சங்கையும், கோபாலப் பெட்டியையும் என்னிடம் திருப்பித் தந்துவிடுங்கள்.


அதேநேரம் பொன்னிவளநாட்டு அரண்மனையில் உறக்கத்திலிருந்த தங்காள் கெட்டகனவு கண்டு திடுக்குற்று எழுந்தாள். அக்கனவில் பால் காய்ச்சும் மண்டபத்தில் பாசிகள் படர்ந்தும், யானைக்கொட்டடியில் புற்கள் மண்டியும், குதிரை லாயத்தில் குப்பை கூளங்கள் குவிந்து கிடப்பது போலவும் கண்டாள். அத்தோடு அவளுடைய அண்ணன் மனைவிகளின் மூக்குத்தியும், காதணியும் கழண்டு விழுவது போலவும் கண்டு கலக்கமுற்றாள்.
பணிப்பெண்களே! என் அண்ணன்கள் தந்துவிட்டுச் சென்ற அடையாளப் பொருட்களை சென்று பார்க்க வேண்டும்.


ஆ..! கடவுளே!
மாங்காய் காய்ந்தும், மல்லிகைப்பூ வாடியும், நெய்விளக்கு அணைந்தும், தேங்காய் உடைந்தும், தண்ணீர் நிறம் மாறியும், சந்தனம் காய்ந்தும் போய் விட்டன.
பொன்னிவளநாட்டு சகோதரர்கள் கொம்பனை அழித்து, வேட்டுவர்களையும் வீழ்த்திவிட்டனர். ஆனால் பூமியில் அவர்களின் ஆயுட்காலம் முடிந்துவடைந்ததால் தாங்களே தங்கள் உயிர்களை மாய்த்துக் கொண்டனர். அவர்களின் உயிரும் சிவனிடம் விஷ்ணுவால் சேர்க்கப்பட்டுவிட்டது. இனிமேல் ஆதரவற்ற அவர்களது அன்புத்தங்கை என்ன செய்யப் போகிறாள்? இந்த பொன்னிவளநாட்டை அவர்களுக்குப் பின் யார் ஆளப்போகிறார்கள்?

# பொன்னிவளாவை பற்றி ஒரு சிறு தொகுப்பு

பொன்னிவளா ஒரு புரதான பண்டை கால கதை. இக்கதை கிராமத்து உடுக்கை பாடகர்களால் இன்றும் ஆடலும், பாடலுமாக சொல்லப்படும் ஒரு பழங்கதையாகும்.

1965 வருடம் கொங்கு நாட்டில் உள்ள மின்வசதி இல்லாத சிறு கிராமத்தில், ஒலி நாடாவை கொண்டு, 18 இரவுகளில் ஒலி பதிவு செய்யப்பட்ட கதையாகும். முதன் முறையாக, கம்யூட்டர் 2D அனிமேஷனில் 26 தொலைக்காட்சி தொடர்களாக ஊருவாக்கப்பட்டு, பல மொழிகளில் பதிவு செய்யப்பட்டது.

ராஜாங்கம் என்பது அதன் மக்களால்தான் கட்டமைக்கப்படுகிறது. உதாரணமாக குடையுன் பரந்து விரிந்த மேல்பகுதி ராஜாங்கம் என்றால், மக்கள்தான் அதனை தாங்கி நிற்கும் கம்பிகள்.

எனவே ஒரு ராஜாங்கத்தைப்பற்றி சொல்லவேண்டும் என்றால், அந்த ராஜாங்கத்தின் மக்களை பற்றியும் சொல்லவேண்டும். அப்போதுதான் அந்த ராஜாங்கத்தைப்பற்றி முழுமையாக புரிந்து கொள்ள முடியும். இக்கதை கொங்கு மக்களின் கதை. இக்கதை தோராயமாக ஆறாம் நூற்றாண்டில் கொங்கு மக்களின் வாழ்க்கை முறையையும், அவர்களின் சமுதாய மற்றும் நாகரீக வாழ்க்கையையும் சித்தரிக்கிறது.




மேலும் பொன்னிவளாவைப்பற்றி விபரம் அறிய பொன்னிவள இணைய தளத்திற்கு செல்லுகள்
www.ponnivala.com/comic25tamil



# வாருங்கள்! பொன்னிவள அங்காடிக்கு

சித்திரக்கதை - HD அனிமேஷன் - விளையாட்டு - வாணிக பொருட்கள் - கேளிக்கை - மேலும் பல இலவசங்கள்!







01. காராளர் தோற்றம்
02. அநாதைச்சிறுவன்
03. நாடு கடத்தல்
04. உரிமையுள்ள காதலி
05. அதிசய கல்யாணம்
06. வருத்த விதை
07. ஆயிரம் யாசகர்கள்
08. கொடிய சாபம்
09. உத்தமியின் கோபம்
10. விரக்தியுன் பலன்
11. சாப நிவர்த்தி
12. சொர்க வாசல்
13. விதியின் கணக்கு
14. கோவில் ரகசியம்
15. உண்மை தெரிந்தது
16. நாடு திரும்புதல்
17. மானம் பெரிதென்று
18. சினம் கொண்ட சின்னவர்
19. சுதந்திரம் வென்றது
20. ஆசீர்வதிக்கப்பட்ட வாள்
21. சாம்புகனின் தந்திரம்
22. புதிய சவால்
23. நேருக்கு நேர்
24. எதிரியின் சவால்
25. பெரும் தியாகம்
26. ஒரு சகாப்தம் முடிந்தது

## 26யும் பெற்றுகொள்ள!

ISBN 978-1-927093-66-5

www.ponnivalamarket.com

மேலும் விபரங்களுக்கு இணைய தளத்திற்கு செல்க:

www.ponnivala.com

© 2012 Ponnivala Publishing